தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மார்கழி 22, திருவள்ளுவர் ஆண்டு–2050

2020 ஜனவரி 7, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு."

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. தி.கா. நல்லப்பன், திரு. சீ.க. வடிவேலு, திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், திரு. எஸ்.ஏ.எம். உசேன், திரு. சு. சுப்பிரமணியம், திரு. கே.வி. முரளிதரன், திரு. என்.ஆர். அழகராஜா, திரு. ரா. நாராயணன், திரு. கே.கே. சின்னப்பன், திரு. வ.மு. சுப்பிரமணியன், திரு. வை. பாலசுந்தரம், டாக்டர் மு. தேவராஜன், திரு. எம். சக்திவேல் முருகன் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. தி.கா. நல்லப்பன் அவர்கள் 26–7–2019 அன்றும், திரு. சீ.க. வடிவேலு அவர்கள் 1–8–2019 அன்றும், திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் அவர்கள் 6–8–2019 அன்றும், திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்கள் 6–8–2019 அன்றும், திரு. சு. சுப்பிரமணியம் அவர்கள் 7–8–2019 அன்றும், திரு. கே.வி. முரளிதரன் அவர்கள் 10–8–2019 அன்றும், திரு. என்.ஆர். அழகராஜா அவர்கள் 1–9–2019 அன்றும், திரு. ரா. நாராயணன் அவர்கள் 10–9–2019 அன்றும், திரு. கே.கே. சின்னப்பன் அவர்கள் 13–9–2019 அன்றும், திரு. வ.மு. சுப்பிரமணியன் அவர்கள்*

[பேரவைத் தலைவர்] [2020 ஜனவரி 7

21–9–2019 அன்றும், திரு. வை. பாலசுந்தரம் அவர்கள் 6–12–2019 அன்றும், டாக்டர் மு. தேவராஜன் அவர்கள் 27–12–2019 அன்றும் மற்றும் திரு. எம். சக்திவேல் முருகன் அவர்கள் 3–1–2020 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி.கா. நல்லபப்பன் அவர்கள் 1980–1984 ஆம் ஆண்டுகளில் பெருந்துறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. சீ.க. வடிவேலு அவர்கள் 1967–1971 மற்றும் 1971–1976 ஆகிய ஆண்டுகளில் தொட்டியம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் திருச்செந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைச்சராகவும் நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. சு. சுப்பிரமணியம் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் உத்திரமேரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. கே.வி. முரளிதரன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் தளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. என்.ஆர். அழகராஜா அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் தேனி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. ரா. நாராயணன் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் தாரமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கே.கே. சின்னப்பன் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

2020 ஜனவரி 7] [பேரவைத் தலைவர்]

திரு. வ.மு. சுப்பிரமணியன் அவர்கள் 1977–1980 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் மானாமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் அச்சரப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

டாக்டர் மு. தேவராஜன் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் பெரம்பலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. எம். சக்திவேல் முருகன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10–05

2. இரங்கல் தீர்மானம்

டாக்டர் பி.எச். பாண்டியன், சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *“1977–1980, 1980–1984, 1985–1988 மற்றும் 1989–1991 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து நான்கு முறை சேரன்மகாதேவி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்*